
8744

# தீவகம்

8744

## ஒரு வரலாற்று நோக்கு



CPL
8744

பேராசிரியர் வி. சிவசாமி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகம் – ஒரு வரலாற்று நோக்கு

8744

பேராசிரியர் வி. சிவசாமி

எஸ். டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

திருமதி விநாயகமூர்த்தி மகேஸ்வரிப்பிள்ளை அவர்களின்
நினைவாக இப் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது

CPL
8744

யாழ்ப்பாண[ம்]
1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர்: தீவகம் — ஒரு வரலாற்றுநோக்கு

ஆசிரியர் வி. சிவசாமி B. A. Hons (Lond) B.A., M.A. (Cey)

விலாசம்: இணைப்பேராசிரியர்
தலைவர்
சம்ஸ்கிருதத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்
இலங்கை

பொருள்: வரலாறு

பதிப்பு: முதலாம் பதிப்பு

உரிமை: நூலாசிரியர்

அச்சகம்: செட்டியார் அச்சகம்

ஆண்டு: 1990

*Name of the Book:* Islands in Historical Perspective

*Author:* V. Sivasamy B A. Hons (Lond) B. A., M. A. (Cey)

*Addres:* Associate Professor and Head Depatment of Sanskrit
University of Jaffna
Jaffna
Sri Lanka

*Subject* History

*Edition* Fist Edition

*Copy Right* Author

*Printers* Chettiar Press, Jaffna

*Year* 1990

8744
950

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் முன்னுரை

யாழ்ப்பாணக்குடாநாட்டினை அடுத்துள்ள ஏழு பிரதான தீவுகளும் கூட்டாகத் தீவகம் என இக்கட்டுரையில் அழைக்கப்பட்டுள்ளன. இவற்றின் வரலாறு சுருக்கமாக இப்பிரசுரத்திலே எடுத்துக் கூறப்படுகின்றது. இவ்விடயம் பற்றி இத்தகைய பிரசுரம் ஒன்று இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. தீவகத்திலுள்ள கோவில்கள் பாடசாலைகள் சமய சமூக நிறுவனங்கள் முதலியனபற்றி அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ள சிறப்புப்பிரசுரங்களில் அவ்வவ்விடங்கள் பற்றிய சில குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. மேலும் சுமார் எழுபது ஆண்டுகளின் முன் பசெற் எனும் ஆங்கிலேயர் எழுதியுள்ள Romantic Ceylon எனும் நூலிலும் தீவுகள் பற்றிய ஒரு சுருக்கமான அத்தியாயம் உள்ளது. எனினும் இதுவரை தீவகம் பற்றி அறியப்பட்டுள்ள சில முக்கியமான தகவல்கள் இப்பிரசுரத்தில் இடம் பெற்றுள்ளன. ஆனால் இவ்விடயம் மேலும் நன்கு விரிவாக எழுதப்பட வேண்டியதாகும். தீவகம் பற்றிய இப்பிரசுரம் அண்மையிலே காலமான என் அருமைத் தாயார் நினைவாக வெளியிடப்படுகிறது. என் அருமைத் தாயார் இம்மண்ணிலே மிகுந்த பற்றுடையவர். வசதி குறைந்த பிராந்தியம் என இப்பகுதி மக்களில் ஒரு சாரார் கருதி வெளியேறிக் கொண்டிருக்கும் காலகட்டத்திலே தான் பிறந்து வளர்ந்து எட்டுத் தசாப்தத்திற்குச் சற்று மேலாக வாழ்ந்த இம் மண்ணிலேதான் இறுதிமூச்சினை விடவேண்டும் எனும் சிந்தனையுடன் செயற்பட்டுவந்தவர். "பிச்சை புகினும் கற்றல் நன்றே" என்ற மூதுரைக் கேற்பப் பல கஷ்டங்கள் மத்தியில் அவரும் என் தந்தையாரும் எம்மைக் கற்பிப்பதிலே கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டவர்கள். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக உறுதுணையாக இருந்து எம்மைப் போதித்தவர். எனவே அவரின் பசுமையான அருமையான நினைவுகளுக்காக இப்பிரசுரம் வெளியிடப்படுகிறது. இத்தகைய பிரசுரம் ஒன்றினை என் தாயார் நினைவாக வெளியிடுவதே சாலப் பொருத்தமானதெனக் கூறி ஊக்கமளித்த நண்பர்கள் வரலாற்று விரிவுரையாளர் திரு. ப. புஷ்பரத்தினமும் புவியியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. இரா. சிவச்சந்திரனும் உளம்கனிந்த நன்றிக்குடையவர். மேலும் இதனை மிகக் குறுகியகால அவகாசத்தில் அச்சேற்றித் தந்த யாழ்ப்பாணம் செட்டியார் அச்சகத்தினரும் மிகுந்த நன்றிக்குரியர்.

*ஜனனீ ஜன்மபூ மிஸ்ச ஸ்வர்காதபி கரீயஸீ//*
*— மார்க்கண்டேய புராணம்*

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே,

—பாரதியார்

புங்குடுதீவு
*13 - 06 - 1990*

வி. சிவசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகம் - ஒரு வரலாற்று நோக்கு

யாழ்ப்பாணக்குடாநாடு போன்று அதனையடுத்துள்ள பிரதான தீவுகளும் நீண்டகால வரலாறு கொண்டவை. இவற்றிலே வேலணை, புங்குடுதீவு நெடுந்தீவு, நயினாதீவு, அனலதீவு எழுவதீவு காரைதீவு (காரைநகர்) ஆகிய ஏழு (சப்த) தீவுகள் நன்கு குறிப்பிடத்தக்கவை, இவையே இங்கு தீவகம் எனத்தொகுப்பாக அழைக்கப்பட்டுள்ளன. புவியியல் ரீதியிலும் வரலாற்று ரீதியிலும் இவை யாழ்ப்பாணக் குடா நாட்டின் ஒன்றிணைந்த பகுதிகளாயினும் இவற்றிற்குத் தனிச்சிறப்பியல்புகளும் உள்ளன. இவற்றின் தொடர்ச்சியான வரலாற்றினைக் கூறும் இலக்கிய மூலகங்களோ வாய்மொழி மரபுகளோ இல்லை. ஆனால் சில ஐதீகங்களும், மரபுகளும் உள்ளன எனினும் புராதன இலங்கை வரலாற்றைக் கூறும் தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம், பௌத்த ஜாதகக் கதைகள், மணிமேகலை, நம்பொத்த, கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, வையாபாடல் முதலிய இலக்கிய நூல்கள், சாசனங்கள், கட்டிடங்கள், சிற்பங்கள், மட்பாண்டங்கள், இடப்பெயர்கள், சில வாய்மொழி மரபுகள் முதலியவனவற்றின் துணைகொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராதன, மத்தியகால வரலாறு பற்றி ஓரளவு கூறலாம். போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் பிரித்தானியர் கால ஆவணங்கள், வரலாற்றாசிரியர் குறிப்புக்கள். அவ்வக்கால இந்துக்கோவில்கள் கோட்டைகள், கத்தோலிக்க, புராட்டஸ்தாந்து சமயத் தேவாலயங்கள் முதலியன பிற்பட்ட கால வரலாற்றினை அறிவதற்கு ஓரளவு உதவி புரிவன. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோரின் பிறசமய அழிவுக் கொள்கையினாலே, யாழ்ப்பாணக் குடாநாட்டிற் போன்று இங்கிருந்த முற்பட்ட கால இந்துக் கோவில்களும், பிற வழிபாட்டிடங்களும் அழிக்கப்பட்டு விட்டன. அவ்வாறாயினும், அண்மைக்காலத்திலே சில பழைய கோவில்களின் சின்னங்கள் சில கிடைத்துள்ளன. இவை பற்றிப் பின்னர் கூறப்படும். மேலும் அண்மைக்காலத்திலே ஆங்கிலேயரான பேராசிரியர். ஜோன் காரஸ்வெல் அல்லைப்பிட்டி போன்ற இடங்களில் நடத்திய ஆய்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினர் நடத்திய அகழ்வாய்வுகள். மேலாய்வுகள், யாழ்ப்பாணத் தொல்லியற் கழகத்தினர் நடத்திய மேலாய்வுகள், இவர்களுக்கு முன் முதலியார் குலசபாநாதன், போன்றோர் செய்த சில ஆய்வுகள் மூலம் வரலாற்று உண்மைகளை அறிய முடிகிறது. இத்தீவுகளின் சில கேந்திர நிலையங்களில் ஒழுங்கான அகழ்வாய்வுகள் மேலும் நடத்தப்படின் இவற்றின் வரலாறு துலங்கும். எவ்வாறாயினும், வரலாற்று மரபுகள் முறைப்படி பேணப்படாமை பெரிய குறைபாடாகும்.

வரலாற்றுரீதியிலே நோக்கும்போது யாழ்ப்பாணக்குடாநாட்டிற் போன்று, இவற்றிலும் கிறித்துவுக்கு முற்பட்ட காலம் தொட்டு மக்கள் நடமாட்டங்கள் நிலவி வந்துள்ளன என்பதில் ஐயமில்லை. இத்தீவுகள் அமைந்திருக்கும் நிலையம் இவ்விடங்களிலே குடியேறிய மக்களைப் பற்றி ஓரளவாவது அறிய உதவும். இவை யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு அண்மையிலுள்ளன. அதே வேளையில் தென்னிந்திய குறிப்பாகத் தமிழ் நாட்டுக்கரையோரப் பகுதிக்குச் சற்றுத் தொலைவில் உள்ளன. எனவே ஒரு புறத்தில் இந்தியாவிலுள்ள தமிழ்நாடு, கேரள, ஆந்திர பிரதேசம் மாநிலங்களிலிருந்து காலம் தோறும் மக்கள் சிலர் வர்த்தகம், மீன் பிடித்தல் புதிய நாடுகளுக்குச் செல்லும் ஆவல் சமய ஆர்வம், முதலிய காரணங்களாலும், பல்லவ, பாண்டிய, சோழ விஜயநகரப்பேரரசுகளின் ஆதிக்கப் படர்ச்சிகளைத் தொடர்ந்தும் இவ்விடங்களிலே வந்து குடியேறியிருப்பர். இக்குடிபெயர்ப்புகளில் தமிழ்நாடு தான் பிரதான பங்கு பெற்றிருந்தது என்பதில் ஐயமில்லை. தமிழ்நாட்டில் இருந்து இங்கு ஏற்பட்ட குடியேற்றம் பற்றிக் கைலாயமாலை (196 – 197) யாழ்ப்பாணவைபவமாலை ஆகியன குறிப்பிடுகையில் யாழ்ப்பாணத்தை ஆண்ட சிங்கை ஆரிய மகாராசனின் வண்டுகோளின்படி செய்யூர் இருமரபும் துய்ய தனிநாயகன் எனும் வளாளன் நெடுந்தீவிலே குடியிருத்தப்பட்டான் எனக் கூறுகின்றன. யாழ்ப்பாணத்தையடுத்த தீவுகளில் தமிழகத்திற்கு மிக அண்மையி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ுள்ளது நெடுந்தீவாகும். இந்தியாவிலிருந்து இங்கு வந்த மக்களில் ஒரு சாரார் காலப்போக்கில் மற்றைய தீவுகளிலும் குடாநாட்டிலும் குடியேறியிருப்பர். தனிநாயகனின் குடும்பத்தைச் சேர்ந்தோர் எனத் தம்மைக் கூறிக்கொள்ளுவோர் மற்றைய சில தீவுகளிலும் உளர். எனவே, தனிநாயகனின் வழி வந்தோர் வேறு சில தீவுகளிலும் தொடர்பு கொண்டிருந்தனர் எனலாம். தமிழ் நாட்டிலிருந்து தீவகத்திற்கும், குடாநாட்டிற்கும் புலம் பெயர்ந்த மக்கட் புலப்பெயர்ச்சியின் ஓர் அலையெனக் குறிப்பிட்ட தனிநாயகன் பற்றிய கதையினைக் கொள்ளலாம்.

தமிழ் நாட்டிலிருந்து தீவகத்திற்கு வந்து குடியேறிய மக்களில் ஒரு சாரார் தீவகத்திற்குத் தென்கீழ்த்திசையிலுள்ள பூநகரிப் பிராந்தியத்திற்கும் சென்று குடியேறியுள்ளனர் என்பது அண்மைக்காலத்திலே வரலாற்று விரிவுரையாளர் திரு. ப புஷ்பரத்தினம் பூநகரியிலே மேற்கொண்டுள்ள ஆய்வுகளாலும் தெளிவாகின்றது. மேற்குறிப்பிட்டது போன்று இதற்கு முன்னரும் பின்னரும் மக்கட் புலப்பெயர்ச்சிகள் தீவகத்திலும், குடாநாட்டிலும் பூநகரியிலும் ஏற்பட்டிருக்கலாம். சில புலப்பெயர்ச்சிகள் நேரடியாகவே தமிழகத்திலிருந்து ஏற்பட்டிருக்காலம். வேறு சில குடாநாட்டிலேற்பட்டுப் பின்னர் தீவகத்தில் ஏற்பட்டிருக்கலாம். இவை பெரும்பாலும் நேரடியாகவே தமிழ் நாட்டிலிருந்து ஏற்பட்டிருக்கலாம். பின்னர், வசதிகளையும், தொழில்வாய்ப்புகளையும் நாடி ஒருசாரார் குடாநாட்டிற்கும் பூநகரிக்கும் சென்றிருப்பார். இன்றும் இப்போக்கு நிலவுகின்றது. எனவே, பெரும்பாலும் ஒரு புறத்திலே குறிப்பாகத் தமிழகத்திலிருந்தும். மறுபுறத்திலே சிறிதளவு குடாநாட்டிலிருந்தும் மக்கட் புலப் பெயர்ச்சிகள் தீவகத்திலே ஏற்பட்டிருக்கலாம். மேலும் இத்தீவுகள் அமைதியான இயற்கைச் சூழ்நிலையுள்ள இடங்களாவும் கருதப்பட்டுவந்தன.

தீவகத்திலே நிலவும் சில வழக்காறுகள், குறிப்பாக, ஆற்றுப் பெருக்கு, மலையடி குறிப்பிடற்பாலன. ஆடி மாதத்திலே ஆற்றுப் பெருக்கு இருப்பதால் கிணறுகளிலும் நீர் அதிகரிக்கும் என்பர். இது ஒருவேளை கடற்பெருக்கையும் குறிப்பிடலாம். ஆனால் இம் மாதத்திலே மழை பொழிவதைத் தொடர்ந்து காவிரியாற்று நீர் பெருக்கெடுப்பதும் உண்டு. ஒருவேளை இம் மக்களின் மூதாதையர் சிலர் காவேரி ஆற்றுப் பிரதேசத்திலிருந்து புலம்பெயர்ந்திருப்பர். எனவே, இது ஒரு பழைய நினைவாகவும் இருக்கலாம். அது போலவே மலையடி நெடுந்தீவுக்கப்பால் இருக்கிறதென ஐதிகம் உண்டு. இதுவும் தமிழ்நாட்டு மலைப் பிரதேசம் ஒன்று பற்றிய பழைய நினைவாகலாம். அல்லது அலைகள் மலைபோல உயர்ந்து வருவதை இச்சொல் குறிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தீவுகளிலே வாழும் மக்களிடையே பரஸ்பரத் தொடர்புகள் நிலவி வருகின்றன; அதேவேளையில் குடாநாட்டுடனும் தொடர்புகள் உள்ளன. இவ்விடங்களிலுள்ள சில முதியோரை வினாவும் போது தம்முடைய முன்னோரில் ஒரு சாரார் குடாநாட்டிலிருந்து வந்தனர் என்பர். இங்கு குடியேறிய மக்களில் ஒருசாரார் தொடர்ந்து தொழில் வாய்ப்புகள், திருமண உறவுகள், கல்வி வசதிகள், சில சௌகரியங்கள் முதலியனவற்றின் காரணமாகக் குடாநாட்டிற்குச் செல்லுவதைக் காணலாம்.

இத்தீவுகளின் கரையோரங்களிலே சில முக்கியமான துறைமுகங்கள் இருந்து வந்துள்ளன. அவற்றுள்ளே ஊர்காவற்றுறை (தற்போது காவலூர் எனவும் அழைக்கப்படுகின்றது) முற்காலத்திலே ஊராத்துறை என அழைக்கப்பட்டது. சோழப் பெருமன்னர் இதன் கேந்திர நிலைய முக்கியத்துவத்தினை உணர்ந்து செயற்பட்டு வந்தனர். கி: பி. 12ம் நூற்றாண்டுத் தமிழகத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்களிலும் தற்போது நாகபூசணி அம்மன் ஆலயத்திலுள்ள தமிழ்க் கல்வெட்டிலும் (சுமார் கி. பி. 12ம் நூற்றாண்டு) ஊராத்துறையெனும் பெயரே வந்துள்ளது, இதன் மூலம் சமகால வெளிநாட்டு வர்த்தக முக்கியத்துவம் புலப் படுகின்றது. முற்பட்ட காலப் பௌத்த நூல்களிலும் ஊராத்துறை பற்றிய ஐதிகங்களுண்டு. இதைவிடப் பெரியதுறை (நெடுந்தீவிலும் புங்குடுதீவிலும் உண்டு) குறிகாட்டுவான், கழுதைப்பிட்டி, புளியடித் துறை (புங்குடுதீவிலுள்ளன) கப்பலடி சாட்டி, பண்ணைத்துறை (வேணையில் உள்ளன) மாவிலித்துறை (நெடுந்தீவிலுண்டு) நயினாதீவுத் துறைமுகம், காரைநகர் களபூமியிலுள்ள துறைமுகம் (இது யானைப் பாலம் எனவும் அழைக்கப்பட்டது) அனலதீவு. எழுவதீவு, மண்டதீவு துறைமுகங்கள் முதலியன குறிப்பிடற்பாலன. ஒல்லாந்தர் காலத்திலே களபூமியிலுள்ள யானைப் பாலம் மூலமாக இலங்கை யானைகள் தென் இந்தியாவிற்கும், வங்காளத்திற்கும் ஏற்றுமதி செய்யப்பட் டமை குறித்துப் போல்டேயஸ் எனும் ஒல்லாந்த தேசக் கிறிஸ்தவ சமயகுருவும், ஒல்லாந்த அதிகாரிகளும் குறிப்பிட்டுள்ளனர். இதற்கு முன்னரும் நெடுங்காலமாக இதற்கு ஊடாக வியாபா ரம் நடைபெற்று வந்தது. மற்றைய தீவுகளிலும் சில துறைமுகங் கள் உள்ளன. புளியடித்துறையிலே பழைய காலப் பெருக்க மரம் ஒன்றுள்ளது. இம்மரங்கள் நெடுந்தீவு, மன்னார் போன்ற இடங்களிலுமுண்டு. இம்மரம் வெளிநாட்டவரால் - அராபி யரால் அறிமுகப்படுத்தப்பட்டதாகத் தெரிகின்றது. மேற்குறிப்பிட்ட, துறை முகங்களினூடாக ஒருபுறத்திலே யாழ்ப்பாணக்குடாநாட்டுடனும் இலங்கையின் பிற இடங்களுடனும், மறுபுறத்தில் இந்தியா, சீனா போன்ற பிறநாடுகளுடனும் பல்வேறு தொடர்புகள் நிலவி வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில இடப்பெயர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தீவுகளில் உள்ளன. பெரியதுறை பற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது இருப்பிட்டி எனுமிடப் பெயர் புங்குடுதீவிலும், காரைநகரிலும் உண்டு. மண்டைதீவு எனும் பெயர் வேலணைக்குக் கிழக்கிலும் புங்குடுதீவிலும் உள்ளது. இவை போன்ற இடப்பெயர்கள் மூலம் ஓரிடத்தில் குடியேறியோர் மற்றைய இடத்திற்குச் சென்ற போது முன்னைய இடப்பெயரை இட்டிருக்கலாம். மேலும், சில பெயர்கள் குடாநாட்டிலும், தீவகத்திலும், பூநகரிப் பகுதியிலும் பொதுவாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக உயரப்புலம், மூத்த நயினாபுலம், இருப்பிட்டி செட்டியார் தோட்டம். செட்டியாவளவு போன்ற இடப்பெயர்கள் குடாநாட்டிலும் தீவகத்திலும் உள்ளன. கிராஞ்சி, கேரதீவு, ஆகிய இடப்பெயர்கள் முறையே பூநகரியிலும், தென்மராட்சியிலும் உள்ளன. மேலும் இவ் இரு இடங்களிலும் உள்ள ஐயனார் ஆலயங்களும், முருகன் ஆலயங்களும் ஒப்பிட்டு ஆய்தற்குரியன இப்பெயர்கள் புங்குடுதீவிலும் உண்டு. யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்குப் பகுதியிலே தெல்லிப்பழை தொடக்கம் அராலி வரையுள்ள வழுக்கி (கை) ஆறு எனும் பெயர் அராலிக்கு மேற்கேயுள்ள சிறு கடலுக்கு அப்பால் எதிர்க்கரையிலே சரவணையிலுள்ளது.

இலங்கையின் பிற இடங்களிற் போன்றே தீவகத்திலும் வரலாற்று வெளிச்சம் பெருங்கற் பண்பாட்டுடன் தொடங்கிற்று எனலாம். பெருங்கற்பண்பாடு தீபகற்ப இந்தியாவிலே சுமார் கி.மு. 1000 தொடக்கம் கி. பி. 500 வரை நிலவிற்று. இப்பண்பாட்டு மக்கள் திராவிடர் ஆவர். இப்பண்பாடு இலங்கையிலும் கிறித்துவுக்கு முற்பட்ட, பிற்பட்ட நூற்றாண்டுகளில் நிலவிற்று. பௌத்தம் பரவுவதற்கு(கி மு. 3நூ) முன்பே இப்பண்பாடு இலங்கையில் நிலவியதற்கான சான்றுகள் உள்ளன. அதற்கு முந்திய காலச்சின்னங்கள் செவ்வனே கிடைத்தில. ஒழுங்கான அகழ்வாய்வுகள் இன்னும்சில பிரதானஇடங்களிலே நடைபெற்றில. 1981ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த கலாநிதி பொ. ரகுபதி காரைநகரில் உள்ள களபூமியிலே பெருங்கற்பண்பாட்டுச் சின்னங்கள் சிலவற்றைக் கண்டுபிடித்தார். இத்தகைய சின்னங்கள் சாட்டி, புங்குடுதீவு, முதலிய இடங்களிலும் காணப்படுகின்றன. பெருங்கற்பண்பாட்டிற்கு முற்பட்ட குறுணிக் கற்காலச் சின்னங்கள் சிலவற்றையுமிவர் கண்டுபிடித்துள்ளார். சாட்டிற்கு நேரே வடக்கே குடாநாட்டிலுள்ள ஆனைக் கோட்டையிலும் பெருங்கற்பண்பாட்டுச் சின்னங்கள் அகழ்வாய்வு மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இதற்குச் சில மைல்கள் தூரத்திலுள்ள கந்தரோடையிலே பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த கலாநிதி விமலா பேக்லி, பேராசிரியர் புறொன்சன் முதலிய தொல்லியலாளர் நடத்திய ஆய்வுகளாலும் அங்கு பெருங்கற்பண்பாட்டுச் சின்னங்கள் வெளிவந்தன. புங்குடுதீவின் வடபகுதியிலுள்ள ஊரதீவின் வடகரையில் வட்டக்கற்களாலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கிணறுகள் தென்பட்டனவாகக் கூறப்படுகின்றது. இத்தகைய கிணறுகள் வல்லிபுரம், பூநகரியில் கிராஞ்சி, திருக்கேதீச்சரம் முதலிய இடங்களிலும் காணப்பட்டன. ஊரதீவி லு ள் ள ஐயனார் ஆலயம் குறிப்பிடற்பாலது. இது தற்பொழுது சிவாலயமாக விளங்கினாலும் பழமை வாய்ந்தது. இங்குள்ள கருங்சற்றூண் லிங்கம் வளர்வதாக ஐதிகமுண்டு. இதிலே சில எழுத்துக்கள் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இவ்வெழுத்துக்கள் தமிழ் கிரந்த எழுத்துக்கள் எனக்கருதப்படுகின்றன. இவை செவ்வனே வாசிக்கப்பட வேண்டியவை. இதன்மூலம் இவ்வாலய வரலாறு மட்டுமன்றி இப்பகுதி வரலாறும் மேலும் துலங்கலாம். மேற்குறிப்பிட்ட கிணறுகள் பெருங்கற்பண்பாட்டினைச் சேர்ந்தன எனப் பொதுவாகக் கொள்ளப்படுகின்றன.

இலங்கையின் பூர்வீகக் குடிகளான யக்ஷர். நாகர் பற்றித் தீபவம்சம், மகாவம்சம் முதலிய நூல்கள் கூறுகின்றன. இவர்களிலே யக்ஷர் ஆதி – ஒஸ்ரலோயிட் இனத்தவர் எனவும், நாகர் திராவிடர் எனவும் வரலாற்றாசிரியர் அடையாளம் கண்டுள்ளனர். இந்நாகர் பெரும்பாலும் வடபகுதியிலே வாழ்ந்தனர். இவர்களிடையிலே நாகவழிபாடு பிரபல்யமாக விளங்கிற்று. நாகம்மாள் (நாகபூஷணியம்மன்), நாகதம்பிரான் கோவில்கள் தீவகத்திலே, குறிப்பாக, நயினாதீவிலும் அனலதீவிலும் உள்ளன நாக, நயின எனும் பதங்கள் பாம்பு என்னும் பொருள்படும். நாகவழிபாடு இன்றும் இப்பகுதியிலே பிரபல்யமாக விளங்குகின்றது. புராதன நாகர் மத்தியில் இவ்வழிபாடு நன்கு நிலவி வந்துள்ளது. வையாபாடல் நாகநயினார் தீவு ( 60 ) எனக் குறிப்பிட்டிருப்பது ஈண்டுக் கவனித்தற்பாலது.

பெருங்கற்பண்பாட்டினைச் சேர்ந்த திராவிடர் மத்தியில் புராதன இந்து சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் நிலவிவந்துள்ளன. எனவே புராதன தீவகத்திலே வாழ்ந்த திராவிடர், குறிப்பாகத் தமிழர் மத்தியிலே ஆதி இந்து சமயம் நிலவியிருக்கலாம்.

இதைத் தொடர்ந்து, இலங்கையின் பிற இடங்களிற் போன்று இங்கும் பௌத்தம் பரவியிருக்கலாம். பௌத்தமரபினை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் புராதன வரலாறு கூறும் தீபவம்சம், மகாவம்சம் முதலிய நூல்களிலே நாகதீபம் ஒரு முக்கியமான பௌத்தநிலையமாகக் கூறப்படுகின்றது. இங்கு புத்தபிரான் வந்து சென்றார் என்ற ஐதிகமுண்டு நாகதீபம் எனும் பதம் பரந்த கருத்திலே வட இலங்கை முழுவதையும் குறிக்குமாயினும், சிறப்பாக நயினாதீவினையே குறிக்குமெனக் கருதப்படுகின்றது. பியங்குதீபம் பிறிதொரு முக்கியமான பௌத்தநிலையமாகக் கூறப்படுகின்றது. இங்கு புகழ்பெற்ற அர்உறந்த்ஸ் (பௌத்த ஞானிகள்) வாழ்ந்தனரெனக் குறிப்பிடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடம் பற்றி வல்லிபுரம் பொற்சாசனத்திலும் குறிப்பு உள்ளதெனக் கருதப்படுகின்றது இவ்விடம் புங்குடுதீவு என அடையாளம் காணப்படுகின்றது. தீவகத்திலுள்ள கேரதீவு, மண்டதீவு முதலிய இடப்பெயர்களும் மேற்குறிப்பிட்ட நூல்களிலே வருகின்றன. பௌத்த ஜாதகக் கதைகளிலே காரதிப (காரைதீவு) பற்றிய குறிப்பு வருகின்றன. எடுத்துக்காட்டாக அபித்த ஜாதகத்திலே பிராமணமுனிவரான அசித்த (அகத்தியர்) தனிமையை விரும்பி காசிக்கும் பின் (தமிழ் நாட்டிலுள்ள) காவிரிப்பூம் பட்டினத்திற்கும், அங்கிருந்து நாகர்களுடைய காரைதீவுக்கும் சென்றார் எனக் கூறப்படுகின்றது. அங்கே அவர் காரைச் செடியினை அவித்து உப்பு அல்லது வாசனைத் திரவியங்களைச் சேராது உண்டு, குகையிலே தன்னடக்கமுள்ள தூய துறவியாக வாழ்ந்தார் எனக் கூறப்படுகின்றது. துறவிகள் தனிமையையும் அமைதியையும் நாடி காடுகளிற் போன்று தீவுகளிலும் வாழ்ந்திருப்பர்.

மேலும் தமிழ் நாட்டுப் பௌத்த மரபினை அடிப்படையாகக் கொண்டெழுந்த மணிமேகலையிலே கூறப்படும் மணிபல்லவம் நயினாதீவு என அடையாளம் காணப்படுகிறது. சிலர் இது காரைதீவு (காரைநகர்) எனவும் கருதுவர். மணிமேகலை, ஆபுத்திரன் ஆகியோர் பற்றியும் அக்ஷய பாத்திரம் முதலியன பற்றியுமான ஐதிகங்கள் இன்றும் நயினாதீவிலே நிலவுகின்றன. எனவே தென்னிந்திய, இலங்கைப் பௌத்த மரபுகள் தீவகத்திலும் சங்கமித்துள்ளமை குறிப்பிடற்பாலது. அக்காலகட்டத்தில் இங்கு வாழ்ந்த பௌத்தர்களும் திராவிடர் குறிப்பாகத் தமிழர் எனலாம். இந்தியாவிற் போன்றும் இலங்கையின் பிறவிடங்கள் பலவிற் போன்றும் தீவகத்திலும் இந்துசமயம், பௌத்தம் அக்கப்பக்கமாக பல நூற்றாண்டுகள் நிலவியிருக்கலாம்.

நயினாதீவு எனும் பெயர் நயினாபட்டர் எனும் பிராமணர் தமிழ் நாட்டிலிருந்து வந்து குடியேறியதைத் தொடர்ந்து இத்தீவுக்கு இடப்பட்ட பெயரென ஒரு சாரார் கருதுவர். இவரே அங்கிருந்த நாகதம்பிரான் கோவிலின் ஆதி அர்ச்சகர் எனக் கூறப்படுகிறார் நயினார் என்னும் மக்கட்குழுவினர் இங்கு வந்து குடியேறியமையாலும் பெயர் வந்திருக்கலாமெனச் சிலர் கூறுவர். ஏற்கனவே குறிப்பிட்டவாறு நயினா எனில் பாம்பு எனப் பொருள்படும். நாகவழிபாடு நன்கு நிலவிய இடமாகையாலும் இப்பெயர் வந்திருக்கலாம். இதற்குப் பிராமணத் தீவு எனும் பெயருமிருந்தது. காரைச் செடிகள் அதிகம் இருந்தபடியால் காரைதீவு எனும் பெயர் ஏற்பட்டதெனக் கருதப்படுகின்றது. பிரியங்குக் கொடிகள் அதிகம் காணப்பட்டபடியால் பிரியங்கு தீவு எனும் பெயர்வந்ததாகவும் அது மருவிப் பியங்குதீவு எனவும் புங்குடுதீவு எனப்பெயராயிற்று எனவும் ஒரு சாரார் கருதுவர் புங்கு எனும் மரத்தின் பெயரால் இப்பெயர் வந்திருக்கலாம் எனவும் சிலர் கருது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் மேலும் புங்கனூர், பூங்குடி முதலிய இடப்பெயர்கள் தமிழ் நாட்டிலுள்ளன. ஒருவேளை இப்பெயர்களில் ஒன்று மருவிப் புங்குடு தீவு எனவும் வந்திருக்கலாம். தீவுகளிலே மிக நீண்ட தீவு நெடுந்தீவு என அழைக்கப்பட்டது. மேலும் யாழ்ப்பாணத்திலிருந்து மிகத் தொலைவில் இருப்பதால் இப்பெயர் வந்திருக்கலாம். பசுக்கள் அதிகமாக இருந்தபடியால் பசுந்தீவு எனவும் இது பெயர் பெற்றது. வேலன்தானை என்பதே மருவி வேலணையாயிற்று எனக் கருதப்படுகிறது. யாழ்ப்பாணத்தை ஆண்ட சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி காலத்தில் வேலன் எனும் நாட்டுத்தலைவன் தானை – சேனையுடன் அங்கு இருந்தபடியால் அவ்விடம் வேலணையெனப் பெயர் பெற்றதென்ற ஐதிகமுண்டு. இதுபோலவே, நாராயணன் தானையுடன் தங்கியிருந்த இடம் நாரந்தனை என அழைக்கப்பட்டது எனும் ஐதிகமுண்டு. மேலும் வேலணை, தனத்தீவு எனவும் அழைக்கப்பட்டு வந்தது.

புராதன காலத்திலே தீவகத்திலே நிலவிய ஆட்சிமுறை பற்றி அறிய முடியாதுள்ளது. எனினும், சில குறுநிலத் தலைவர்கள் இத்தீவுகள் ஒன்றில் அல்லது பலவற்றில் ஆதிக்கம் செலுத்தியிருப்பர். இவர்கள் சுதந்திரமாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் ஆட்சி புரிந்த அரசர் அல்லது சிற்றரசர்கள், அநுராதபுரமன்னரின் கீழ் ஆட்சிசெய்த தேசாதிபதிகளின் கீழ் நிருவாகத்தைக் கவனித்திருப்பர். வரலாற்றுக் காலம் தொட்டுத் தீவகம் ஒரு தனி நிருவாகப் பகுதியாக இருந்து வந்திருக்கலாம். குளக்கோட்ட மகாராசன், வெடியரசன் பற்றிய கதைகள் நெடுந்தீவிலும் காரைதீவிலும், அல்லிராணி பற்றிய கதைகள் அல்லைப்பிட்டியிலும் நிலவுகின்றன. இவை ஐதிகங்களாகவே நிலவுகின்றன. இவற்றின் வரலாற்று இயல்பு நுணுகி ஆராயவேண்டியதாகும். மேற்குறிப்பிட்ட நயினா பட்டர், வேலன், நாராயணன் முதலியோர் பற்றிய ஐதிகங்களும் இவற்றுடன் கவனித்தற் பாலன. வேலணையின் நடுப்பகுதியிலே கோபுரத்தடி எனுமிடத்திலுள்ள அழிபாடுகள் அல்லிராணியின் மாளிகைக்கு உரியன என மரபுவழியாகக் கூறப்படுகிறது. ஆனால் உண்மையிலிது போர்த்துக்கீசர் அல்லது ஒல்லாந்தரின் அவதானிப்பு நிலையமாக இருந்திருக்லாமெனவும் கருதப்படுகின்றது. 1832 இல் இது 50 அடி உயரமுள்ளதாயிருந்தது. ஆனால் இன்று அதன் கீழ்ப் பகுதியே இல்லை.

பல்லவர் – பாண்டியர் காலத் தமிழகத்திலேற்பட்ட ஆதிக்கப் படர்ச்சி, சைவ வைணவ மறுமலர்ச்சி முதலியவற்றின் தாக்கம் தீவகத்திலும் ஏற்பட்டிருக்கலாம். இச் சமயத் தாக்கம் வர்த்தக மூலமாகவும் ஏற்பட்டிருக்கலாம். அக்காலச் சமய மறுமலர்ச்சியின் விளைவாகத் தமிழகத்திலேயே பௌத்தம், சமணம் செல்வாக்கிழந்தமை போலத் தீவகத்திலும் காலப்போக்கிலே பௌத்தம் மறைந்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சோழப்பேரரசு அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்திலே இலங்கை முழுவதையும் அடிப்படுத்திற்று. தீவகத்திலும் இதன் தாக்கம் ஏற்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. வட இலங்கையினைக் கட்டுப்படுத்துதற்குக் கேந்திர நிலையத்திலுள்ள ஊர்காவற்றுறை போன்ற துறைமுகங்களையும் கட்டுப்படுத்தல் அவசியமாகும். ஊர்காவற்றுறைக்கு அண்மையில் நாரந்தனையில் இன்று தான்தோன்றி ஈஸ்வரி (மனோண்மணி) ஆலயம் அமைந்துள்ள இடத்திலே சுமார் அரை நூற்றாண்டுக்கு முன் கல் சேகரிக்க வெடி வைத்தபோது, சோழப்பேரரசனாகிய முதலாம் ராஜராஜனின் 38 செப்பு நாணயங்கள், சேரமன்னரின் 5 வெள்ளி நாணயங்கள், பொன்மணிகளின் துண்டுகள், சிறிய அம்மாள் (லக்ஷ்மி) சிலை, முதலினவும், வேறு பொருட்களும் வெளிவந்தனவாகக் கூறப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட சின்னங்களிற் சில யாழ்ப்பாணம் நூதனசாலையில் உள்ளன. பண்ணைத்துறையெனும் பெயர் சோழநாட்டிலுள்ள பெண்ணையாற்றுப் பகுதியிலிருந்து வந்தோராலிடப்பட்டதென்றும் ஐதிகம் உண்டு. புங்குடுதீவிலுள்ள சோழனோடை, சோழகன் புலம் முதலிய இடப்பெயர்கள் குறிப்பிடற்பாலன. மேலும் இத்தீவிலுள்ள பல்லதீவு எனும் இடப்பெயர் சோழருக்கு முந்திய பல்லவத் தொடர்பினைக் காட்டுவதாயுமிருக்கலாம். இதே வேளையில் தமிழ் நாட்டிலே சோழருக்கு முன் ஆட்சி செய்த பல்லவ வம்சத்தினர் மணிபல்லவத்தினைச் சேர்ந்தவர் என்பதும், இம்மணிபல்லவம் ஏற்கனவே குறிப்பிட்டவாறு நயினாதீவு அல்லது காரதீவு என்ற ஐதிகமும் குறிப்பிடற்பாலது. இது பற்றிய செவ்வையான ஆய்வு அவசியம். எனினும் தமிழ்நாட்டுக்கும் தீவகத்திற்குமிடையிலே தொடர்புகள் தொடர்ந்து நிலவி வந்தமை தெளிவாகும்.

கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிலே, சிங்கைநகரை (நல்லூரை)த் தலைநகராகக் கொண்டு எழுச்சிபெற்ற யாழ்ப்பாணத்தமிழரசு காலத்திலே தீவகத்திலும் புதிய திருப்பம் ஏற்பட்டது. இக்காலத்திலே குடாநாடு, வலிகாமம் வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி என நான்கு நிருவாகப் பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தது. இத்துடன் தீவகம் அல்லது தீவுப்பற்றும் ஒரு தனி நிருவாகப் பிரிவாக இருந்தது. இத்தகைய பிரிவு இதற்கு முன்பே நெடுங்காலமாக நிலவி வந்திருக்லாம். யாழ்ப்பாண மன்னரைத் தொடர்ந்து, ஆதிக்கமேற்படுத்திய போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோர் தீவகத்தினை ஒரு தனி நிருவாகப் பிரிவாகவே பரிபாலித்து வந்தனர். பிரித்தானியர் ஆட்சிக்குப் பின் (1948 பின்) இக்காலம் வரை இந்நிருவாகப் பிரிவு மேலும் இரண்டு பிரிவுகளாகவும் பின் மூன்று பிரிவுகளாகவும், கவனிக்கப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னாட்டு வணிக, பண்பாட்டுத் தொடர்புகள் தீவகத்திலும், நிலவி வந்தன. இந்தியத் தொடர்புகளைவிட, கிரேக்க, உரோம, அராபிய, சீன வர்த்தகத் தொடர்புகளும், யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் நிலவியது போன்று தீவகத்திலும் நிலவியிருந்திருக்கலாம். இந்தியத் தொடர்புகளுக்கான சான்றுகள் சில ஏற்கனவே கூறப்பட்டுள்ளன. நயினாதீவு நாகபூஷணியம்மன் கோவிலில் உள்ள கற்பலகைச் சாசனம் ஊர்காவற்றுறையிலிருந்து அங்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இச்சாசனத்தின் மூலம் கி. பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே, முதலாம் பராக்கிரமபாகு காலத்திலே ஊர்காவற்றுறையிலே நடைபெற்று வந்த வெளிநாட்டு வர்த்தகம் பற்றிய சில விபரங்கள் அறியப்படுகின்றன. இக்கல்வெட்டுத் தமிழிலே குறிப்பாக வர்த்தக ஒழுங்கு முறை பற்றிக் கூறுவதால் இவ்வர்த்தகத்தினை நடத்தியவர்களும் அதில் ஈடுபட்டு வந்த வெளிநாட்டவர்களும் தமிழர் என்பது வெள்ளிடைமலை. மேலும் ஊர்காவற்றுறை அக்காலத்திலே சர்வதேச வர்த்தகத் தொடர்புள்ள முக்கியமான துறைமுகமாக விளங்கிற்று என்பதும் புலப்படும். 192?லே வினாசிபிலிப்பன் என்பவன் அல்லைப்பிட்டியிலே கிடங்கு வெட்டியபோது 17 குஜராத் பொற்காசுகள் கிடைத்தனவாக அறியப்படுகின்றது. சோழப்பெருமன்னரின் காசுகள், மத்திய கால இலங்கை பொலநறுவை, தம்பதேனியா யாப்பகூவ. கோட்டை மன்னரின் காசுகள் தீவகத்திலும் கிடைத்துள்ளன. இவை பெரும்பாலும் வர்த்தகத்தின் மூலம் இங்கு கொண்டு வரப்பட்டிருக்கலாம். சோழரின் காசுகள் அவர்களின் ஆதிக்கத்தினைத் தொடர்ந்தும் கொண்டுவரப்பட்டிருக்கலாம். பொலநறுவக்காலத்தின் (கி. பி. 13 ம் நூற்றாண்டு முற்பகுதி) பின் தென் இலங்கை மன்னரின் ஆதிக்கம் வடபிராந்தியத்திலே பொதுவாக நிலவவில்லை. யாழ்ப்பாண மன்னரின் சேது நாணயங்கள் தீவகத்திலும் கிடைத்துள்ளன. இவை அவர்களின் மேலாதிக்கம் இங்கு நிலவியதைக் காட்டுவதாகலாம். மேலும் இங்கு கிடைக்கும் போர்த்துக்கீசர், ஒல்லாந்த நாணயங்களும் அவர்களின் மேலாதிக்கம் நிலவியதை எடுத்துக்காட்டுவன

சீனத்தொடர்புகளைக் காட்டும் சான்றுகள் குறிப்பிடற்பாலன. கி. பி. 10ம் நூற்றாண்டு தொடக்கம் சில நூற்றாண்டுகளாகச் சீன வர்த்தகம் செழிப்பாக இலங்கையிலும் நடைபெற்று வந்தது. தீவகத்திலும் இதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. வேலணையின் மேற்குக் கரையில் உள்ள சீனன்கோவில் எனுமிடத்திலே சீனக்குடியிருப்பு ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. சுமார் அரை நூற்றாண்டுக்கு முன் நயினாதீவிலே துறைமுகத்திற்கு அண்மையிலுள்ள பப்பிரவன்சல்லி என்னும் இடத்திலே கிடங்கு வெட்டிய போது பெரிய சாடிகள் வெளிவந்தன. அவற்றுள் ஒன்று 1936ல் கொழும்பு நூதனசாலைக்குக்கொண்டு செல்லப்பட்டது. அங்கு நூதனசாலை இயக்குநராகக் கடமையாற்றிய திரு. மல்பஸ் என்பவர் இதனை கி. பி. 12 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த சீனச்சாடியென அடையாளம் காட்டினார். இத்தகைய சாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் தீவகத்தில் நயினாதீவு, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை முதலிய இடங்களிலும், வெளியேபொலநறுவ கிடைத்துள்ளன. இவ்வபோன்ற சாடிகளின் துண்டுகள் அல்லைப்பிட்டி, கந்தரோடை, வல்லிபுரம், மாந்தை முதலிய இடங்களிலும் காணப்பட்டுள்ளன. அல்லைப்பிட்டியிலே 1977லே பேராசிரியர் ஜோன் கார்ஸ்வெல் நடத்திய அகழ்வாய்வின் போது மேற் குறிப்பிட்ட சீனச்சாடிகள், மட்பாண்டங்கள் முதலியவற்றின் துண்டுகள் முதலியன வெளிவந்தன. இவ் அகழ்வாய்வின் போது, பழைய இந்துக்கோவில் இருந்ததற்கான தடயங்களும் கிடைத்துள்ளன. மேற்குறிப்பிட்ட பேராசிரியர் மாந்தையிலும் சீனத்தொடர்புடைய சான்றுகள் சிலவற்றைக் கண்டுபிடித்துள்ளார். இவை கி பி. 10 ஆம் நூற்றாண்டு தொடக்கம் சில நூற்றாண்டுகளாக இலங்கையில் நிலவிய சீனத்தொடர்புகள், குறிப்பாக வர்த்தகத் தொடர்புகளை எடுத்துக்காட்டுவதாக அப்பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். கி. பி. 12ம் நூற்றாண்டளவைச் சேர்ந்த சீனக் காசுகள் கந்தரோடையிலே கிடைத்துள்ளன. மலாய்த் தீவகற்பம், ஜாவா போன்ற இடங்களைச் சேர்ந்த சந்திரபானுவின் படையெடுப்பினாலும், வர்த்தகத்தொடர்பு போன்றவற்றினாலும் மலாய்த்தீபகற்பம், ஜாவா போன்ற தென்கிழக்காசியத் தொடர்புகளும் நிலவின எனலாம். எடுத்துக் காட்டாக தீவகத்திலுள்ள சில இடப்பெயர்களில் சாவான் (ஜாவாக்காரன்) வளவு சீனன்புலம் கணக்கனார் வளவு, செட்டியார் தோட்டம், செட்டி வளவு பணிக்கன் புலம் போன்றவை முறையே ஜாவக, சீன, இந்தியத் தொடர்புகளைக் காட்டுவனவாகலாம். இந்நாடுகளைச் சேர்ந்த வணிகர் இவ்விடங்களில் தங்கியிருந்திருக்கலாம். அல்லது தொடர்பு கொண்டிருக்கலாம். கோவளம் என்னும் இடப்பெயர் காரைநகரின் மேற்குப் பகுதியிலும், குடாநாட்டின் வட கரையிலும் உண்டு இதே பெயர் கேரளமாநிலக்கரையிலுமுண்டு. எனவே, அங்கிருந்து இவ்விடங்களுக்கு ஏற்பட்ட மக்கட் புலப்பெயர்ச்சி அல்லது வர்த்தக, பண்பாட்டுத் தொடர்பு அல்லது இவ் இரண்டினையும் இப்பெயர்காட்டுவதாகலாம். இது போலவே வேலணையிலுள்ள கரம்பன் எனுமிடம் கேரளத்திலுள்ளது. இதுவும் மேற்குறிப்பிட்ட தொடர்பு அல்லது தொடர்புகளை எடுத்துக்காட்டுவதாகலாம். தீவகத்திலுள்ள இடப்பெயர்கள் சிலவற்றிலே சில பழைய தூய தமிழ் வழக்காறுகளும் காணப்படுகின்றன. துருத்தியெனும் சொல் தீவையும் குறிக்கும். திருமுருகாற்றுப்படையில் (வரி. 203) இக்கருத்தில் வந்துள்ளது. புங்குடுதீவிலே குறிகாட்டுவானுக்கும் பிரதான தீவுக்குமிடையிலுள்ள சிறு தீவு நடுவுத்துருத்தி (நடுவே உள்ளதீவு) என அழைக்கப்படுகின்றது. களபூமி (போர்க்களம் அல்லது நெற் களம்) என்னுமிடம் காரைநகரிலுள்ளது. களதீவு என்னுமிடம் புங்குடுதீவிலுள்ளது. புறநானூற்றுச் செய்திகளைக் குறிப்பாசப் புறப்பொருள் அம்சங்கள் சிலவற்றை நினைவூட்டும் வெட்சி யாமுனை, வியப்புலி, கரந்தலி, பானாவிடை போன்ற இடப்பெயர்கள் புங்குடுதீவிலுள்ளன என அவ்வூர் முதுப்பெரும் சைவத்தமிழ் அறிஞர் வித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான் அ. கனகசபை கருதுகிறார். பசுத்தீவு என அழைக்கப்படும் நெடுந்தீவிலிருந்தும் அயலில் உள்ள கச்சதீவில் இருந்தும் பால், தயிர், நெய் முதலியன இராமேஸ்வரத்திலுள்ள இராமநாதசுவாமி கோயிலுக்கு கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் பெரிய புலம், பள்ளம்புலம், உயரப்புலம், மண்கும்பான், மடத்துவெளி, குறிகாட்டுவான் நெடுந்தீவு, பண்ணைத்துறை முதலிய இடப்பெயர்கள் குறிப்பிடற்பாலன. முதலாம் ராஜேந்திர சோழப் பெருமன்னனின் தென்கிழக்கு ஆசிய விஜயம் பற்றிக் கூறும் தமிழ் மெய்க்கீர்த்தியிலே அவன் வென்ற இடங்களிலொன்றாகப் பண்ணையும் குறிப்பிடப்படுகிறது. துறைநீர்ப்பண்ணை என அது குறிப்பிடப்பட்டுள்ளமை ஈண்டுக்கவனித்தற்பாலது. பண்ணைத்துறை இவ்விடத்தினதும் பண்ணைத்துறையினதும் பெயர், சோழரின் பெண்ணையாற்றுக் தொடர்பாலும் இப்பெயர் ஏற்பட்டிருக்காம். பெண்ணைபண்ணையாகத் திரிபுற்றிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. ஆறுபோன்று இவையும் கடலையடுத்து இருப்பது கவனித்தற்பாலது. பெண்ணையாற்றுப் பகுதியிலிருந்து புலம் பெயர்ந்துவந்த மக்கள் இங்கே இறங்கிய போது. இது தமது தாய்நாட்டிலுள்ள நிலம் போல இருந்தமையால் இப் பெயரிட்டனர் என்று ஐதிகமுண்டு. இது நன்கு ஆராயப்பட வேண்டியதாகும்.

தமது தாய் நாட்டிலுள்ள சில அம்சங்கள் தீவகத்திலே காணப் பட்டபடியாற் போலும் ஒல்லாந்தர் தாய் நாட்டிலுள்ள இடப்பெயர்கள் சிலவற்றை இவற்றிக்குச் சூட்டினர். அங்கு றைனின் ஆற்றின் கீழ்ப் பகுதிகளில் தீவுகள் போன்ற நிலப்பகுதிகள் காணப்படுவது போல இங்கு கடல் நீரினால் சூழப்பட்டுள்ள தீவுகளை அவர்கள் அவதானித்தும் பெயரிட்டிருக்கலாம் இங்குள்ள கடல்களை அவர்கள் உவர்நீர் ஆறுகள் எனவும் தமது ஆவணங்களிலே குறிப்பிட்டுள்ளனர். இப் பெயர்ப்பட்ட வழக்காறு தீவகத்திலும் உண்டு. ஏழு தீவுகளையும் சூழ்ந்துள்ள கடல் நீர் ஒன்று சேருமிடம் ஏழாற்றுப் பிரிவு என அழைக்கப் படுகின்றது. இப்பகுதியிலே சுழி நீரோட்டமிருப்பதால் வள்ளங்கள் முதலியன இவற்றை விலக்குவன அல்லது கவனமாகச் செல்லுவன. ஒல்லாந்தர் வேலணையினை லெய்டென் எனவும் காரை தீவினை (காரைநகரை) அம்ஸ்ரர்டம் எனவும் புங்குடு தீவினை மிடில்பேர்க் எனவும் நயினாதீவை ஹார்லெம் எனவும், அனலதீவினை றொட்டர்டாம் எனவும், நெடுந்தீவினை டெல்வ்ற் எனவும் அழைத்தனர். இவற்றுள் லெய்டன், டெல்வ்ற் ஆகிய இரண்டு பெயரும் இன்றும் வழக்கிலுள்ளன. ஊர்காவற்றுறையினைப் போர்த்துக்கீசர் காயெஸ் (Gaes) என அழைத்தனர். அங்கு ஐரி (உருண்டி)க் கோட்டையினைக் கட்டினர். யாழ்ப்பாணக் கடலை பாதுகாக்க அவர்கள் வோர்ட்டலெஷா டு காயெஸ் (Fortalexa do Caes) எனும் கோட்டையினைக் கட்டினர், இதன் அழிபாடுகள் உள்ள இடமே காரைநகர் மேற்கில் உள்ள ராசாவின் தோட்டமெனக்கருதப்படுகிறது. இவ்விடத்திலே இப்பகுதி மன்னரின் மாளிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருக்கலாம். Caes டச்சுமொழியில் கயிற்ஸ் (Kayts) என அழைக்கப்பட்டது. இப்பெயர் ஒல்லாந்திலுள்ள ஓர் இடப்பெயராகும். காயெஸ் எனும் பெயர் முதலில் இதற்கு எதிரே காரைநகரிலுள்ள துறைமுகத்திற்கு இருந்ததாகவும் பின்னரே இவ்விடத்தினை குறித்ததாகவும் கருதப்படுகின்றது. ஆங்கிலத்திலும் Kayts எனும் பெயரே இன்றும் நிலைத்துள்ளது.

போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் ஆட்சியினை நினைவூட்டும் கோட்டைகள் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, காரைநகர் முதலிய இடங்களில் இன்றும் உள. இவற்றுள்ளே உறமென்உறீல் கோட்டை குறிப்பிடற்பாலது. காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்குமிடையேயுள்ள கற்பாறையிலான சிறுதீவிலிது அமைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே செல்லும் கப்பல்களை அவதானிக்கலாம். யாழ்ப்பாணக் குடாநாட்டின் வெளித் தொடர்புகளைக் கட்டுப்படுத்தக்கூடிய கேந்திர ஸ்தானமொன்றில் இது அமைந்துள்ளது. இதன் முக்கியத்துவத்தினைப் போர்த்துக்கீசர் உணர்ந்து ஒரு சிறு கோட்டையினை இங்கு கட்டினர். அவர்களுக்கு முன் யாழ்ப்பாணத்து மன்னரும் அதன் முக்கியத்துவத்தினை உணர்ந்திருப்பர். போர்த்துக்கீசரைத் தொடர்ந்து ஆதிக்கம் பெற்ற ஒல்லாந்தர் இதனைத் திட்டமிட்டுப் பெருப்பித்துக் கட்டினர். இது பன்றியின் கால் வடிவத்தில் அமைந்துள்ளபடியால் தமது மொழியில் ஒல்லாந்தர் இவ்வாறு அழைத்தனர். இப்பெயரே இன்றும் நிலைத்துள்ளது. இவர்களின் கட்டிடக்கலைத் திறனுக்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டாகும். தொடர்ந்து பிரித்தானியரும் இதனைப் பயன்படுத்தி வந்தனர். அனலதீவு போர்த்துக்கீசர் காலத்திலே டொனாகிளார எனும் மாதினால் நிருவகிக்கப்பட்டு வந்தது. அவர் பருத்த தேகமுடையவர் எனவும் அவர் பயன்படுத்திய கதிரையில் சாதாரணமாக இருவர் இருக்கலாம் எனவும் கூறப்பட்டுள்ளது. இத்தீவு அவரின் பெயராலும் அழைக்கப்பட்டது.

ஊர்காவற்றுறையிலே கப்பல் கட்டும் தொழில் நெடுங்காலமாக நிலைத்துள்ளது காரைநகரின் மேற்குப் பகுதியிலுள்ள சூரியன்பிட்டி குறிப்பிடற்பாலது, இங்கு தமிழ் மன்னர்கால மாளிகை இருந்திருக்கலாம். இதன் மேலே போர்த்துக்கீசரின் கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருக்கலாம் ஆனால் அகழ்வு ஆய்வு மூலமே இவற்றை உறுதிப்படுத்தல் அவசியம். ஒல்லாந்தர் நெடுந்தீவிலே குதிரை வளர்த்தலை ஊக்கப்படுத்தி வந்தனர். அராபியா, பாரசீகம் முதலிய நாடுகளிலிருந்து நல்ல இனக் குதிரைகளை இங்கு கொண்டு வந்து பெருக்கினர். பின் வந்த ஆங்கிலேயரும் இதில் ஓரளவு கவனம் செலுத்தினர். ஆனால் குதிரைகள் தரம் குன்றிய நிலையில் இன்றும் உள்ளன. பிரித்தானியர் ஆட்சியின் தொடக்கத்திலே இராணுவ அதிகாரியான நோலன் நெடுந்தீவு நிருவாகத்தை கவனித்து வந்தான், அவன் அயர்லாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டினைச் சேர்ந்தவன். தாய்நாட்டிற் போன்று முருகைக்கற்களா லான வேலியினை அறிமுகப்படுத்தியிருக்கலாமென கருதப்படுகின்றது இவ்வேலிமுறை நெடுந்தீவுக்குரிய சிறப்பு அமிசமாகும். மேலும் புங்குடு தீவு மேற்கிலே கல்லடைப்பு என்னும் பகுதியில் இத்தகைய வேலி சில காலத்தின் முன் இருந்தது. ஆனால் இப்பொழுது இல்லை.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் தொடர்புகளினாலே கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து, கிறிஸ்தவ சமயங்கள் தீவகத்திலும் பரவின. இவற்றிற்கான தேவாலயங்களும் அமைக்கப்பட்டன. போர்த்துக்கீசர் காலத் தேவாலயங்களை ஒல்லாந்தர் திருத்தியோ, திருத்தாமலோ தமது தேவாலயங்களாகவும் பயன்படுத்தினர் இதனால் போர்த்துக்கீசர் காலக் கத்தோலிக்க தேவாலயங்கள் இன்று இல்லை ஒல்லாந்தரின் தேவாலயங்கள் பலவும் பின் கைவிடப்பட்டன, இன்றைய தேவாலயங்கள் பெரும்பாலும் பிரித்தானியர் காலத்தவை. நயினாதீவு, சாட்டி ஆகிய இடங்களிலே முஸ்லிம் குடியிருப்புக்கள் சில உள்ளன.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆவணங்கள், அறிக்கைகள், கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து சமய குருமார் எழுதிய நூல்கள் மூலம் தீவகம் பற்றிய மேலும் சில நம்பகரமான தகவல்கள் கிடைக்கின்றன. அவற்றுட் சிலமுற்பட்டவை, சில சமகாலத்தவை; சில ஐதிகங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்களிலே வேர்னாவோடி குவேறோஸ், பேலோதரிநிதாதே ஆகிய கத்தோலிக்க மத குருமாரும், றிபெய்ரோ எனும் போர்த்துக்கீசத் தளபதியும், போல்டேயஸ் எனும் ஒல்லாந்த புரட்டஸ்தாந்து மதகுருவும், எழுதியுள்ள நூல்களும், ஒல்லாந்த தேசாதிபதிகள் சிலர் எழுதியுள்ள அறிக்கைகளும் (Memoirs) குறிப்பிடற்பாலன. போர்த்துக்கீசருடைய முக்கியமான ஆவணங்களில் ஒரு பகுதி ஒல்லாந்தருடன் நடைபெற்ற போர்களில் அழிந்துவிட்டமை துரதிர்ஷ்டமே. எனினுப் கோவாவிலும் லிஸ்பனினும் சில முக்கியமான ஆவணங்கள் உள்ளன. ஒல்லாந்தர் கால ஆவணங்களைப் பிரித்தானியர் பெருமளவு பேணியுள்ளனர். எம்மவர் மத்தியிலே வரலாற்று மரபுகள் நன்கு பேணப்பட்டில. அதேவேளையிலே எம் நாட்டிற்கு வந்த மேற்குறிப்பிட்ட பிறநாட்டவர் எழுதி விட்டுச் சென்றுள்ள சில முக்கியமான ஆவணங்கள் இதுவரை நன்கு பயன்படுத்தப் படாமையும் துரதிர்ஷ்டமே. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் கால வரலாற்று மூலங்களைப் பயன்படுத்துவதில் வரலாற்று மாணவர் நன்கு கவனம் செலுத்தவேண்டும். மேற்கூறிப்பிட்ட போர்த்துக்கீச ஒல்லாந்த ஆவணங்கள், அறிக்கைகள், நூல்கள் மூலம் இக்காலகட்டத்திலே தீவகத்திலே வாழ்ந்த மக்களின் தொகை அவர்களின் தொழில், தொழில் வாய்ப்புக்கள், பொருள்வளங்கள் முதலியன பற்றி ஓரளவாவது அறியலாம். தீவகத்திலே விவசாயம், மந்தைவளர்த்தல், மீன்பிடித்தல் வியாபாரம் முதலியன தொழில்களும் சாயவேர், சிப்பி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கு, மீன், மான் முயல் ஆடு, மாடு, எருமை, குதிரை (நெடுந்தீவில்) பனை, தென்னை முதலிய மூலவளங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. சிறுகாடுகளும் இங்கு இருந்தன. புங்குடுதீவிலுள்ள பெருங்காடு, கற்காடு, கோட்டைக்காடு, நாரந்தனையிலுள்ள பெரியகாடு போன்ற இடப்பெயர்கள் இதனை இன்றும் நினைவூட்டும். இவற்றில் மான் முயல் முதலிய மிருகங்களும் வாழ்ந்தன. இங்கு மான்கள் காணப்பட்டமை குறித்து ஒல்லாந்த ஆவணங்களும் குறிப்பிடுகின்றன. மானெழுவம், மானாவெள்ளை மானங்கன் முதலிய இடப்பெயர்கள் இதனை நினைவூட்டுவன போலும். கி. பி. 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே (1658 — 1665) ஒல்லாந்த மதகுருவாகக் கடமையாற்றிய போல்டேயஸ் சுவாமிகள் புங்குடுதீவில் வாழ்ந்த ஆண்கள் ஏனைய இந்தியப் பகுதிகளிலுள்ளவர்களிலும் பார்க்க உயரமானவர்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் போர்த்துக்கீச ஆசிரியர் சிலரின் கூற்றுப்படி தீவகத்திலே கடற்கொள்ளையரின் அட்டகாசங்களினால் மக்கட்தொகை அக்காலத்திலே குறைவாக இருந்ததாகவும், போர்த்துக்கீசர் வருகையினைத் தொடர்ந்து அமைதியேற்படக் கூடுதலான மக்கள் இங்கு வாழ்ந்தனர் எனவும் அறியப்படுகின்றது இது எந்த அளவுக்கு வரலாற்றுண்மை என்பது ஆராயப்பட வேண்டியதாகும். சாயவேர் தீவகத்தின் பல இடங்களிலும் கிடைத்ததாயினும், காரைநகரிற் கிடைத்த சாயவேரே மிகச்சிறந்த ரகமானதாகக் கூறப்படுகின்றது. பருத்தியும் ஓரளவு பயிரிடப்பட்டது. பருத்திஅடைப்பு, பருத்திவளவு, பருத்தித்தீவு முதலிய இடப்பெயர்கள் தீவகத்தில் உள்ளன. திரு முத்தையாபிள்ளை என்பவர் பருத்தித்தீவிலே பருத்தி உற்பத்தியைப் பெரிய அளவில் தொடங்கினார். ஆனால், அங்கு பருத்திச்செடி நன்கு வளர்ந்தாலும் லாபகரமில்லாமையால் கைவிடப்பட்டது. ஆனால் பெயர் மட்டும் நிலைத்துள்ளது. நெடுந்தீவிலே நோலன் என்பவன் சணல் உற்பத்தியைப் பெருக்கினான்.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியிலே, 19ம் நூற்றாண்டு முடிவிலும், குறிப்பாக இருபதாம் நூற்றாண்டு முற்பகுதியிலும் தீவக மக்களில் ஒரு சாரார் பெரிய, சிறிய வர்த்தகம் செய்யும் நோக்குடன் தென்னிலங்கை சென்றனர். அங்கே அவர்களிற்சிலர் காலப் போக்கிலே பிரபல வர்த்தகர் ஆயினர். வேறு சிலர் மலேசியாவுக்கும் சிங்கப்பூருக்கும் சென்றனர். இவர்களில் ஒருசாரார் அவ்விடங்களிலே தங்கிவிட்டனர், மற்றையோர் திரும்பிவிட்டனர். 1948ன் பின் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றதிட்டங்களை தொடர்து ஒருசாரார் கிளிநொச்சி முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், முதலிய மாவட்டங்களிலே குடியேறியுள்ளனர். 1983ல் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து ஒரு சாரார், பிரான்ஸ் மேற்கு ஜேர்மனி, டென்மார்க், நோர்வே, கனடா, இங்கிலாந்து, முதலிய நாடுகளுக்குச் சென்றுள்ளனர். வேறு சிலர் சவுதி அரேபியா, ஓமான் போன்ற மேற்கு ஆசிய நாடுகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலிகத் தொழில் நாடிச் சென்றுள்ளனர். தீவக மக்களின் வரலாற்றினை நோக்கும் போது "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்னும் தமிழ் மூதுரைக்கு அவர்கள் நல்லதோர் எடுத்துக்காட்டாகவும் உள்ளனர். இத்தீவுப்பற்று நீண்டகால வரலாறும் தனித்துவமும் கொண்டதாகும். இப்பகுதி மக்களின் நாட்டுபற்று மொழிப்பற்று, சமயபற்று முதலியன குறிப்பிடற்பாலன. தீவகவரலாறு பற்றிய மேலோட்டமான சில தகவல்கள் இச்சிறு கட்டுரையிலே தரப்பட்டுள்ளன. விஞ்ஞான ரீதியிலே பல்வேறு வரலாற்று மூலங்களையும் நன்கு பயன்படுத்தி மேலும் இவ் வரலாறு விரிவாக எழுதப்படவேண்டும்.

## இக்கட்டுரைக்குப் பயன்படுத்தப்பட்ட சில முக்கியமான உசாத்துணை நூல்கள்


Baldase, Phillipus

**A True and Exact Description of the Great Island of Ceylon,** The Ceyion Historical, Journal, Vol viii, July 1958 to April 1959, Nos. 1-4

Basett R. H.

**Romantic Ceylon,** Great Britain, 1929

Casie Chitty, Simon

**The Ceylon Gazetteer,** Ceylon 1934 Reprinted with an Intr. by Prof. T. Vimalananda, Colombo. 1972

Law, B. C (Ed. and Tr),

**Dipavamsa,** The Ceylon Historical Journal; Vol, Vii, July 1957 to: April 1958, Nos. 1-4

Mahanama

**Mahavamsa** Eng Tr by W. Geiger, London, 1934

Paulo Da Trinidade

**Conquista Spiritual du Oriente.** Chapters on the introduction of Christianty in Ceylon translated and annotated by the Rt. Rev. Dr. E. Peiris and Friar Achilles Meersman, Colombo, 1972.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Queyroz, Fernan

**The Temporal and Spiritual Conquest of the Island Ceylon vols 1-iii,** Tr. by Fr. S. G. Perera, Colmbo, 19..

Raghupathy, P

**Early Settlements in Jaffna - An Archaeological Survey** Unpublished Ph. D. Thesis submitted to the University of Jaffna, 1983

Rasanayagam S

**Ancient Jaffna,** Jaffna, Madras, 1926.

Ray H. C. (Ed)

**The History of Ceylon** Vol. I, Pts I and II, Colombo 1960

Ribeiro

Ceylon presented by Captain Juan Ribeyro to the King of Portugal in 1685 Tr. by Abbele Grand. Colombo, MDCCCXLVI1

குமாரசுவாமி ச. *வடமாகாணத்துச் சில இடப்பெயர்களின் வரலாறு.*

மயில்வாகனப் புலவர், *யாழ்ப்பாண வைபவமாலை (பதிப்பாசிரியர் முதலியார் குல சபாநாதன்) யாழ்ப்பாணம், 1955*

வேலுப்பிள்ளை ச. *யாழ்ப்பாண வைபவகௌமுதி, 1918*

மூத்துக் கவிராசர், *கைலாயமாலை, யாழ்ப்பாணம், 1983*

தனி அறிக்கைகள் பிற வெளியீடுகள்:

Memoivs of the Dutch Governors

ஈழகேசரி

உதயதாரகை

பூர்வகலா, *யாழ்ப்பாணத் தொல்பொருளியற் கழகச் சஞ்சிகை, மலர் 1 வட்டுக்கோட்டை, 1973*

ஆத்மஜோதி சிறப்பு மலர், *உலக இந்து மகாநாடு, நாவலப்பிட்டி, 1982 (பதிப்பாசிரியர் நா. முத்தையா)*

சிந்தனை *(பதிப்பாசிரியர் கலாநிதி கா. இந்திரபாலா), தொகுதிகள் 1—5 வரை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினாதீவு நாகபூஷணியம்மன் கோவிலிலுள்ள கற்பலகைச் சாசனம்

1. . . . . . நாங்கள் . .
2. . . . . . வந்து ஊராத்துறை
3. (யில்) பரதெசிகள் வந்து
4. இருக்க வெணுமென்றும்
5. அவர்கள் ரகைஷிப்படெ
6. வணுமென்றும் பலதுன
7. ற களில் பரதெசிகள் வந்து நந்து
8. றையிலெ(ல) கூட வெணுமென்று
9. (ம்) நாம் ஆனை குதிரை மெல்ஸ்நெஉற
10. (மு) ண்டாதலால் நமக்கு ஆனை குதிரை
11. கொடுவந்த மரக்கலங் கெட்டது
12. ண்டாகில் நாலத்தொன்று பண்டா
13. (ர) த்துக்குக் கொண்டு மூன்று கூறும்
14. (உ) டையவனுக்கு விடக்கடவதாகவு
15. (ம்) வாணிப மரக்கலங் கெட்டதுண்
16. டாகில் செம்பாகம் பண்டாரத்துக்
17. (கு) க் கொண்டு செம்பாகம் உடைய
18. (வ) னுக்கு விடக்கடவதாகவும் இவ்
19. வவஸ்தை சந்திராதித்ய(ரு) ள்ளதனையுங்க
20. ல்லிலுஞ் செம்பிலும் எழுத்து வெ
21. ட்டி வித்து இவ்வவஸ்தை செய்துங்கு
22. டுத்து தேவ (உற) பராக்ரமபுஜோ ரிபுராஜவ
23. (ம்ச) தேவநல(ஸ்) ஸகலஸிம்உறள சக்ரவ
24. ர் (த்தி)

கல் வெட்டின் கீழ்ப்பகுதியுள்ள கற்பலகை கோவிற்சுவருக்குள்ளே வைத்துக் கட்டப்பட்டதாக அறியப்படுகின்றது. கத்தி தீட்டியதாலும் வேறு சில காரணங்களாலும் இதன் பின்புறத்திலுள்ள எழுத்துக்கள் பெரும்பாலும் மறைந்துவிட்டன. இக்கல்வெட்டு ஊர்காவற்றுறையிலே எழுதப்பட்டமை தெளிவாகிறது. இதன் பிரதி செம்பிலும் எழுதப் பட்டுள்ளது. அது எங்குள்ளதென்பது தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16ம் நூற்றாண்டின் பின் தீபகம் பற்றி

| நூலாசிரியரின் இனம், பெயர், காலம் | வேலணை | காரைதீவு / காரைநகர் | |
|---|---|---|---|
| வேர்ணாவோடி குவேறோஸ், போர்த்துக்கீச மதகுரு, கி. பி. 17ம் நூ. பிற்பகுதி | "Tanadiva", 1200 மக்கள், பனந்தோப்புகள் வயல்கள் | "Cardiva", 600 மக்கள் வரையில் பனந்தோப்புகள், வயல்கள், வசிப்பதற்கு நல்ல இடம், முற்காலத்தில் பழைய வீடுகளும், கழுதைகளும் இருந்தன. | ' Congardiv… தோப்புக்கள்… |
| போலோத திரிநிதாதே, போர்த்துக்கீச மதகுரு கி. பி. 17ம் நூ. | "Tanadiva Balane", கி. பி. 1595 அளவில் இது செப்புப்பட்டய மூலம் போர்த்துக்கீச குருமாருக்கு யாழ்ப்பாண அரசனால் வழங்கப்பட்டது, 1300 மக்கள் | Cardiu | பழைய கட… உள்ளன. ப… |
| றிபெய்ரோ, போர்த்துக்கீசத் தளபதி கி. பி. 17 ம் நூ. பிற்பகுதி (1685 ல் எழுதப்பட்டது). | ஊராத்துறை, பல கிராமங்களும் ஒரு கோட்டையுமுண்டு. 2600 மக்கள். | ' Caradiva ' 1600 மக்கள் பல மந்தைகள் உள்ளன. மிகத்திறமான சாயவேர். | • Pangardivi… ளனர். இங்… தேகமுடைய… யாடுதல், ம… அதிகம். |
| போல்டேயஸ் ஒல்லாந்த மதகுரு கி. பி. 1658 — 1665 வரை யாழ்ப்பாணத்திலே கிறிஸ்தவ சமயப்பணியில் ஈடுபட்டவர். | ஊராத்துறை, 2600 மக்கள், பெருந்தொகையான மீன், மான், திறமான சாயவேர், நேர்த்தியான வெண்ணெய், முட்டை | Caradiva, சோழ மண்டலக்கரைக்கும் வங்காளத்துக்கும் இதன் ஊடாக யானை ஏற்றுமதி, 1000-1100 மக்கள் பாம்புகள் அதிகம் மிகத் திறமான சாயவேர். | Pongardiva … பெருவாரியா… மீன், சிப்பி, … கள், 800 ம… |
| சைமன் காசிச்செட்டி தமிழர் 1834 ல் நூல் எழுதியவர்; முதலியார் நீதிபதி, சட்டசபை உறுப்பினர். | 1514 மக்கள் பல மந்தை நெல், தென்னை, பனை | 5222 மக்கள், மந்தைகள், மீன் பிடித்தல் தென்னைகள், பனை, பலா, மா, இலுப்பை, திறமான சாயவேர், சங்கு. | ஆடுகள் பல … லிருந்து நெய… மக்கள். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...ற்றிச் சில ஆசிரியர்கள் கூறியுள்ள விபரங்கள்

| புங்குடுதீவு | நயினாதீவு | அனலைதீவு | நெடுந்தீவு |
|---|---|---|---|
| ...ardiva ' 800 மக்கள் பனந் ...புக்கள் நெல்வயல்கள் | பனந்தோப்புகள் வயல்கள் 60 குடும்பங்கள் " பாம்புகள் உள்ள தீவு ". | 90 குடும்பங்கள், வயல்கள், பனந் தோப்புகள் | பசுத்தீவு விசேட ஆடுகள் 300 குடும்பங்கள். |
| ... கட்டிடச் சிதைவுகள் ...ர. பலமக்கள் | பிராமணத்தீவு 1000 மக்கள் | டொனாகிளாரவின் தீவு 1290 மக்கள் | பசுத்தீவு 1200 மக்கள் |
| ...rdivia ' பல மக்கள் உள் ... இங்குள்ள மக்கள் பருத்த ...டையவர். மீன், வேட்டை ..., மான், எருமை, மயில், | பிராமணத்தீவு | டொனாகிளரவின் பெயரால் அழைக்கப்படுகிறது. இவருடைய பாரிய கதிரை பலருக்கு விநோதமாக இருந்தது. | சுமார் 900 மக்கள் |
| ...iva பாம்புகள் அதிகம் ...ரியான மான், மயில், ...பி, மிக உயரமான ஆண் ...0 மக்கள் | இங்கு மதம் மாறிய பிராமணர் உள்ளனர்; 300 மக்கள் | சிப்பிகள் அதிகம் 800 மக்கள் | பசுத்தீவு தொண்டை மண்டலத்திலிருந்து பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டன. |
| ...பல உள்ளன. இவற்றி ...நெய் பெறப்படும். 2415 | 418 மக்கள், நாகதம்பிரான் கோவில். | 1814 ல் 11·48 பின் 1831லே 995 ஆக மக்கள் தொகை குறைந்தது. | 2947 வரட்சியை நீக்க ஒல்லாந்தர் 1100 கிணறுகள் வெட்டினர். மந்தைகள் அதிகம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11-11-197

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பு எண் 954.93 வரவுப் பதிவெண் 8744

இந் நூலைக் கீழ்க்காணும் திகதியன்றோ, அதற்கு முன்னரோ நூலகத்திற்குத் திருப்பிக் கொடுத்து விட வேண்டும்.

03/05/01 -13(S)

31 AUG 2005

2430

06 DEC 2014

2713

8744

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம். 292/1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org